செ.வெ.எண்: 129/2017 நாள்: 20.02.2017

# கால்நடை பராமரிப்புத் துறை

# பத்திரிக்கைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் 12வது சுற்று கால் மற்றும் வாய்நோய் தடுப்பூசி பணி 2017 மார்ச் 1-ம் தேதி முதல் மார்ச் 21 முடிய 21 நாட்கள் நடைபெறவுள்ளது. இச்சுற்றில் சுமார் 70,000 கால்நடைகளுக்கு தடுப்பூசிபோட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் கால் மற்றும் வாய்நோய் தடுப்பூசி பணி 21 நாட்களும் காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும் பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரையிலும் நடைபெறும்.

கால்நோய் மற்றும் வாய்நோய் பெரும்பாலும் இரட்டை குளம்புகள் கொண்ட கலப்பின கால்நடைகளை தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்தும் நோய் ஆகும்.

## நோய் பரவும் விதம்

இந்த நோய் பாதித்த மாடுகளிலிருந்து மற்ற மாடுகளுக்கு நேரடியாக தொற்றும் தன்மை கொண்டது. பாதிக்கப்பட்ட மாடுகளிலிருந்து தீவனம், தீவனத் தட்டுகள், தண்ணீர், வைக்கோல், கால்நடைகளின் இதர உபகரணங்கள் மற்றும் மனிதர்கள் மூலமும் பரவும். இந்த நோய் விரைவாக காற்றின் மூலம் பரவும் தன்மை கொண்டது. பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர், பால், உமிழ்நீர், சாணம் ஆகியவற்றால் இந்த நோய் அதிகமான கால்நடைகளுக்கு பரவுகின்றது.

## நோய் அறிகுறிகள்

1. காய்ச்சல்
2. தீவனம் உட்கொள்ளாது மந்த நிலைமையில் இருக்கும்
3. வாயிலிருந்து நுரை கலந்த உமிழ்நீர் நூல் போல ஒழுகிய வண்ணம் இருக்கும்
4. வாயின் உட்பகுதி நாக்கு மற்றும் கால் குளம்புகளின் நடுப்பகுதி, மடி ஆகிய இடங்களில் கொப்புளங்கள் தோன்றி பின்பு அவை உடைந்து ரணமாகி மாறும்.
5. அசை போடும் போது மாடு சப்பை கொட்டுவது போல் சப்தம் உண்டாகும்.
6. சினை மாடுகளில் கருச்சிதைவு ஏற்படலாம்.
7. பாதிக்கப்பட்ட மாடுகளில் மலட்டுத் தன்மையும், இரத்த சோகையும் ஏற்படும்.

8. பாதிக்கப்பட்ட பசுக்களில் கன்றுகளை பால் குடிக்கவிடக்கூடாது. அவ்வாறு குடித்தால் கன்றுகள் உடனடியாக இறக்க நேரிடும்.

இந்நோய் தாக்குதலினால்

- ❖ கறவை மாடுகளின் பால் உற்பத்தி குறைகிறது.
- ❖ எருதுகளின் வேலை செய்யும் திறன் குறைகிறது
- ❖ கறவை மாடுகள் சினைபிடிப்பது குறைகிறது
- ❖ இளம் கன்றுகளின் இறப்பு நேரிடுகிறது

இந்நோயிலிருந்து முற்றிலுமாக கால்நடைகளை பாதுகாப்பதற்கு வருடந்தோறும் மார்ச் மற்றும் செப்டம்பர் மாதங்களில் 1 முதல் 21 தியதி வரை 21 நாட்கள் இதுவரையிலும் பதினொரு சுற்றுகள் வாய்நோய் மற்றும் கால்நோய் தடுப்பூசி கால்நடைகளுக்கு போடப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக இவ்வருடம் மார்ச் 1 முதல் 21வரை பன்னிரெண்டாவது சுற்றாக கால்நோய் மற்றும் வாய்நோய் தடுப்பூசி நமது மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கால்நடை பராமரிப்பு துறையினரால் பல்வேறு குழுக்கள் மூலம் போடப்படுகிறது.

எனவே கால்நடை வளர்ப்போர் இத்தருணத்தை பயன்படுத்தி எந்தவித விடுபாடுமின்றி தங்கள் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மண்டல இணை இயக்குநர் (கூ.பொ)
கால்நடை பராமரிப்புத் துறை
கன்னியாகுமரி(இ) நாகர்கோவில்

மாவட்ட ஆட்சித் தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்
நாகர்கோவில்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.